நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

புதுவை ஜிப்மரில் 77-வது குடியரசுதினத்தை முன்னிட்டு ஊழியர்களுக்கான ரத்ததான முகாம் நடைபெற்றது. இயக்குனர் டாக்டர் வீர்சிங் நேகி முகாமை தொடங்கி வைத்தார். ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் சகா வினோத்குமார் மற்றும் ஜிப்மர் ரத்ததான மையத்தின் துறை தலைவர், பேராசிரியர்கள், ஊழியர்கள் உடனிருந்தனர். 200-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தன்னார்வுடன் பங்கு பெற்று ரத்த தானம் வழங்கினர்.

மாலை மலர்
23–1–2026 (வெள்ளிக்கிழமை)

ஜிப்மர் ஊழியர்கள் ரத்த தானம்

புதுச்சேரி, ஜன.23– உலக சுகாதார மையத்தின் 2025 ஆண்டின் மைய கருவான ரத்த தானம் செய்வோம், நம்பிக்கையை அளிப்போம் உயிர்களை காப்போம் என்பதின் அடிப்படையில் புதுவை ஜிப்மர் ரத்த தான மையம் தொடர்ந்து பல்வேறு முகாம்களையும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது.

77–வது குடியரசு தினத்தை முன்னிட்டு ஜிப்மர் ஊழியர்கள் சார்பில் ரத்த தான முகாம் நடந்தது. ஜிப்மர் இயக்குனர் வீர்சிங் நேகி முகாமை தொடங்கி வைத்தார்.

ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் சகா வினோத் குமார் மற்றும் ஜிப்மர் ரத்த தான மையத்தின் துறை தலைவர், பேராசிரியர்கள், ஊழியர்கள் பங்கேற்றனர். 200–க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஆர்வத்துடன் ரத்ததானம் வழங்கினர்.